# DEPOSITION OF WITNESS.
(Chapter XXV, B.N.S.S)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ANDIPATTI

Case No. CC.No. 147 / 2013

Deposition of PW8 / LW12

| | | |
|---|---|---|
| Name | : | திரு. கண்ணன் |
| Father's / Husband Name | : | சின்னான் |
| Village | : | தேவக்கோட்டை |
| Taluk | : | தேவக்கோட்டை |
| Calling | : | காவல் துணை கண்காணிப்பாளர் |
| Age | : | 53 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 23.06.2026.

எதிரி ஆஜர் இல்லை. BNSS பிரிவு 355-ன் கீழ் மனு கொடுத்து அனுமதிக்கப்பட்டது.

**<u>அரசு தரப்பு முதல் விசாரணை</u>**

1.) நான் தற்போது சிவகங்கை மாவட்டம் தேவக்கோட்டை உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 20.02.2013 ம் தேதி 21.30 மணிக்கு க.விலக்கு சார்பு ஆய்வாளர் முத்துக்குமார் க.விலக்கு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலைப் பெற்று அங்கு சென்று அங்கு உள்நோயாளியாக இருந்த பிரதீபா பேசமுடியாமல் இருந்ததால் அவரின் அப்பா சங்கேஷ்வரன் என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தினை பதிவு செய்து பின்பு நிலையம் வந்து க.விலக்கு காவல் நிலைய குற்ற எண். 49 /2013 , இதச பிரிவுகள் 279,337 ன் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4.**

2.)அன்றைய தினமே 23.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் செல்வக்குமார் மற்றும் சண்முகராஜா ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தினை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **பார்வை மகஜர்அசா.ஆ.5 மற்றும் மாதிரி வரைபடம் அசாஆ 6.** அன்றே சாட்சிகள் 1 சங்கரேஷ்வரன், 2 இந்துராணி, 3 முத்துச்செல்வன் மற்றும் பார்வை மகஜர் சாட்சிகள் ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

3.) பின்பு இவ்வழக்கில் காயம்பட்ட பிரதீபா என்பவர் இறந்துவிட்டதாக மதுரை அரசு மருத்துவமனையில் இருந்து வந்த தகவலைப் பெற்று இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளான இதச பிரிவுகள் 279,337 ல் இருந்து இதச பிரிவுகள் 279,337,304(A) ஆக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அசா.ஆ.7.**

4.) பின்பு 21.02.2013 ம் தேதி இவ்வழக்கு கோப்பினை நான் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சம்பவயிடம் சென்று சாட்சிகளை விசாரித்த போது சாட்சிகள் சார்பு ஆய்வாளர் அவர்களிடம் கூறியது போல என்னிடமும் கூறியதால் நான் தனியாக வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை. சாட்சி சங்கரேஷ்வரன், ராஜேஸ் ஆகியோர்களை விசாரித்து மறு வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றை தினம் இவ்வழக்கின் எதிரி முத்து என்பவரை காவல் நிலையத்தில் வைத்து கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன்.

5.) பின்பு 22.02.2013 ம் தேதி காலை 08.00 மணிக்கு இவ்வழக்கில் இறந்துபோன பிரதீபா என்பவரின் பிரேதத்தின் மீது மதுரை இராஜாஜி அரசு மருத்துவமனையில் வைத்து காலை 08.00 மணி முதல் 10.00 மணி வரை சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டு பிரேதபரிசோதனைக்காக முதல்நிலைக் தலைமைக் காவலர் 325 ராஜூ என்பவர் மூலம் வேண்டுகோள் கடிதம் கொடுத்தனுப்பினேன். பிரேத விசாரணை அறிக்கை **அசாஆ 8.**

6.) பின்பு விபத்துஏற்படுத்திய வாகனமான TN 60 F 4109 என்ற லாரியையும், விபத்துக்குள்ளான TN 64 B 9238 என்ற இருசக்கர வாகனத்தினையும் தேனி வட்டார போக்குவரத்து அலுவலகத்துக்கு மோட்டார் வாகன ஆய்விற்காக வேண்டுதல் கடிதம் கொடுத்தேன். முதல்நிலைக் தலைமைக் காவலர் 325 ராஜூ , மற்றும் சார்பு ஆய்வாளர் முத்துக்குமார் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

7.) பின்பு இவ்வழக்கில் காயம்பட்ட முத்துச்செல்வம் என்பவருக்கு முதல் சிகிச்சை அளித்த க.விலக்கு அரசுமருத்துவமனை மருத்துவர் கவிஞர்கண்ணன் என்பவரை விசாரித்து காயச்சான்று பெற்று , வாக்குமூலம் பதிவு செய்தேன். **காயச்சான்று அசா.ஆ.9.** அன்றே இறந்துபோன பிரதீபா என்பவருக்கு பிரேதபரிசோதனை செய்த மதுரை இராஜாஜி அரசு மருத்துவமனை மருத்துவர் இராஜவேல் என்பவரை விசாரித்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். பிரேத பரிசோதனை அறிக்கை **அசாஆ 10.** பின்பு 29.04.2013 ம் தேதி எனது புலன் விசாரணையை முடித்து எதிரி மீது பிரிவு 279, 338, 304(A) இதச –ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. சம்பவத்தன்று விபத்திற்குண்டான இருசக்கர வாகனத்தினை அ.சா.3 முத்துச்செல்வம் என்பவர் தான் ஓட்டினார் என்றால் சரிதான். மேற்படி இருசக்கர வாகனத்தில் அசா.3 , வழக்கில் இறந்துபோன பிரதீபா, தனது இரு குழந்தைகளையும் ஏற்றிக் கொண்டு 4 நபர்களும் வாகனத்தில் பயணம் செய்தார்கள் என்றால் சரிதான். மேற்படி 4 நபர்களும் ஆண்டிபட்டியில் இருந்து தேனி நோக்கி கிழக்கில் இருந்து மேற்காக சென்றார்கள் என்றால் சரிதான். எதிரி ஓட்டிவந்த லாரியானது மேற்கில் இருந்து கிழக்காக வந்தது என்றால் சரிதான்.

2. சம்பவம் நடந்த சமயத்தில் மேற்படி சாலையானது இருவழிச் சாலையாக இருந்தது என்றால் சரிதான். சம்பவம் நடந்த நேரம் இரவு 7.30 – 8.00 க்குள் இருக்கும் என்றாலும், சம்பவயிடம் இருட்டான பகுதி என்றாலும் சரிதான். அசா.3 தனக்கு முன்னால் சென்ற இருசக்கர வாகனத்தினை ஓவர் டேக் செய்யும் போது எதிரே வந்த லாரியை கவனிக்காமல் சென்றார் என்றாலும், அப்போது எதிரி விபத்தினை தவிர்ப்பதற்காக இடது பக்கமாக திருப்பியதால் லாரியின் பின் பக்கத்தில் இருசக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல முன்பக்கம் மோதியதாக தான் உள்ளது.

3. லாரியின் முன்பகுதியில் சேதம் இல்லை என மோட்டார் வாகன அறிக்கையில் உள்ளது என்றால் இல்லை. இந்த விபத்தானது எதிரியின் கவனக்குறைவால் ஏற்படவில்லை என்றாலும் அ.சா.3 னின் கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்றாலும் சரியல்ல. இந்த வழக்கில் அ.சா.1,2 ஆகியோர் இறந்துபோன பிரதீபா என்பவரின் பெற்றோர்கள் என்றால் சரிதான். இவ்வழக்கில் இறந்துபோன பிரதீபா குடும்பத்தாருக்கு இழப்பீடு பெற்றுத்தர வேண்டி எதிரி மீது தவறாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு சம்பவத்திற்கும் எதிரிக்கும் தொடர்பில்லை என்றால் சரியல்ல.

( புலன் விசாரணை அதிகாரி காணொளி மூலம் ஆஜர் ஆனார். அவரது சாட்சியம் Video conference மூலம் பதிவு செய்யப்பட்டது. Coordinator N.Kasthuri, Typist)

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

FAZIL MOHAMED H

Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2026.06.23 13:32:10 +0530

Judicial Magistrate,
Andipatti.